பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
03 05 2025 **SATURDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு சமரச தீர்வு முறை வழிவகுக்கும் என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.
- இந்தியா – அங்கோலா இடையே வேளாண்மை, பாரம்பரிய மருத்துவம், கலாச்சாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.
- பஞ்சாப் மாநிலம், லூதியானாவில் 116 கோடி ரூபாய் அளவிற்கு சரக்கு மற்றும் சேவை வரி மோசடியில் ஈடுபட்ட மூன்று பேரை புலனாய்வுத்துறையினர் கைது செய்தனர்.
- ஆஸ்திரேலிய நாடாளுமன்ற தேர்தலில் தற்போதைய பிரதமர் திரு. Antony Albanese தலைமையிலான தொழிலாளர் கட்சி மீண்டும் வெற்றி பெற்றுள்ளது.
- ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணிக்கு எதிராக டாஸ் வென்ற சென்னை அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

>>>>><<<<<

நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு சமரச தீர்வு முறை வழிவகுக்கும் என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்திய சமரச தீர்வு மைய தொடக்க விழா மற்றும் தேசிய சமரச தீர்வு மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர், சமரச தீர்வு முறை நீதி வழங்கும் நடைமுறையை விரைவுபடுத்தியுள்ளதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சஞ்சீவ் கன்னா, கடந்த 9 ஆண்டுகளில் சமரசம் மூலம் 7 லட்சத்து 57 ஆயிரம் வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

>>>>><<<<<

இந்தியா – அங்கோலா இடையே வேளாண்மை, பாரம்பரிய மருத்துவம், கலாச்சாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, அங்கோலா அதிபர் திரு. Joao Manuel Golcalves Lourenco இடையே நடைபெற்ற பிரதிநிதிகள் நிலையிலான பேச்சுக்களைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

பின்னர் இரு நாடுகளின் சார்பில் கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.

தீவிரவாத செயல்களில் ஈடுபடுவோர் மீதும், அவர்களுக்கு ஆதரவளிப்போர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க இந்தியா உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

எல்லை தாண்டிய தீவிரவாத்திற்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்காக தாம் அங்கோலாவிற்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக அவர் கூறினார்.

அங்கோலா பாதுகாப்புப் படையை நவீனப்படுத்துவதற்காக 200 மில்லியன் டாலர் கடனுதவியை இந்தியா வழங்கும் என்று பிரதமர் அறிவித்தார்.

ஆப்பிரிக்க யூனியனுக்கு தலைமை தாங்கும் அங்கோலாவிற்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

முன்னதாக, 3 நாள் பயணமாக இந்தியா வந்துள்ள அங்கோலா அதிபருக்கு இன்று காலை குடியரசுத்தலைவர் மாளிகையில் பாரம்பரிய வரவேற்பு அளிக்கப்பட்டது.

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் அவரை வரவேற்றனர்.

தமது இந்தியப் பயணம் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அங்கோலா அதிபர் திரு. Joao Manuel Golcalves Lourenco, இப்பயணத்தின் மூலம் இந்தியா – அங்கோலா இடையே நட்புறவும் ஒத்துழைப்பும் மேலும் வலுப்பெறும் என்று குறிப்பிட்டார்.

ராஜ்காட்டில் உள்ள தேசப்பிதா மகாத்மா காந்தியின் நினைவிடத்திற்குச் சென்று அங்கு அவர் மரியாதை செலுத்தினார்.

அதைத்தொடர்ந்து வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கரையும், அங்கோலா அதிபர் சந்தித்து பேசினார்.

>>>>><<<<<

பஹல்காம் தீவிரவாத தாக்குதலை அடுத்து, பாகிஸ்தானிலிருந்து வரும் அனைத்து விதமான கடித போக்குவரத்துக்கும், பார்சல் சேவைகளுக்கும் இந்தியா தடை விதித்துள்ளது.

இதுகுறித்து மத்திய தகவல் தொடர்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பாகிஸ்தானிலிருந்து தரைவழி மற்றும் வான்வழியிலான அனைத்து கடித போக்குவரத்து மற்றும் பார்சல் சேவைகளுக்கு தடை விதிக்க அரசு முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மாஸ்கோ வெற்றிதின கொண்டாட்டத்தில் இந்தியாவின் சார்பில் பாதுகாப்பு இணையமைச்சர் திரு. சஞ்சய் சேத் பங்கேற்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 9ஆம் தேதி நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சியில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் பங்கேற்பார் என்று முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது திரு. சஞ்சய் சேத் அவருக்குப் பதிலாக ரஷ்யா செல்லவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

பஞ்சாப் மாநிலம், லூதியானாவில் சரக்கு மற்றும் சேவை வரி மோசடியில் ஈடுபட்ட மூன்று பேரை சரக்கு மற்றும் சேவை வரி புலனாய்வுத் துறையினர் கைது செய்தனர்.

ஆறு நிறுவனங்களை நடத்தி வந்த அவர்கள், 647 கோடி ரூபாய் அளவிற்கு சட்டவிரோதமாக பொருட்களை விற்பனை செய்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன்மூலம் 116 கோடி ரூபாய் அளவிற்கு வரி ஏய்ப்பு செய்ததாகவும் அவர்கள் கூறினர்.

கைது செய்யப்பட்ட மூவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதாக அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

>>>>><<<<<

ஆஸ்திரேலிய நாடாளுமன்ற தேர்தலில் ஆளும் தொழிலாளர் கட்சி மீண்டும் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றிக்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஆஸ்ரேலிய பிரதமர் திரு. Antony Albanese-க்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், தங்கள் தலைமையின் மீது ஆஸ்திரேலிய மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை இந்த வெற்றி எடுத்துக்காட்டுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா – ஆஸ்திரேலியா இடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவதற்கு இணைந்து செயல்படுவதை தாம் எதிர்நோக்கியுள்ளதாக பிரதமர் அதில் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

இனி, வேவ்ஸ் உச்சிமாநாடு குறித்த செய்திகள்

(வேவ்ஸ் மாநாடு – மியூசிக் – 11 நொடிகள்)

மும்பையில் நடைபெற்று வரும் வேவ்ஸ் உச்சிமாநாட்டின் மூலம் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் வருவாய் ஈட்டப்பட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை செயலர் திரு. சஞ்சய் ஜாஜு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், புதிய வர்த்தக வாய்ப்புகளை கண்டறிதல், ஒருங்கிணைந்து செயல்படுதல் ஆகியவற்றுக்காக ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு துறையைச் சேர்ந்தவர்களுக்கு இந்த மாநாடு சிறந்த வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளதாக கூறினார்.

இம்மாநாட்டில் உலகின் முதன்மையான நிறுவனங்கள் பங்கேற்றுள்ளதாக திரு. சஞ்சய் ஜாஜு தெரிவித்தார்.

(வேவ்ஸ் மாநாடு – மியூசிக் – 11 நொடிகள்)

>>>>><<<<<

சென்னையிலிருந்து இன்று நண்பகல் கொழும்பு புறப்பட்ட விமானத்தில் பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் தொடர்புடையவர்கள் பயணிப்பதாக கிடைத்த தகவலை அடுத்து, அந்த விமானத்தை, இலங்கை காவல்துறை, விமானப்படை மற்றும் விமான நிலைய பாதுகாப்புப் படையினர் இணைந்து சோதனை மேற்கொண்டனர்.

எனினும் சந்தேகத்திற்குரிய நபர்கள் யாரும் அந்த விமானத்தில் பயணிக்கவில்லை என்று கண்டறியப்பட்டதாக அந்நாட்டு ஊடகம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

அமெரிக்காவின் Yellowstone தேசிய பூங்கா அருகே, சுற்றுலா பேருந்தும், லாரியும் மோதிக் கொண்ட விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர். 8 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளதாகவும், இந்த விபத்தில் இரண்டு வாகனங்களும் தீப்பற்றிக் கொண்டதாகவும் அந்நாட்டு காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>><<<<<

யுக்ரைன் நாட்டிற்கு 310 மில்லியன் டாலர் மதிப்பிலான F-16 ரக போர் விமானங்கள் பயிற்சி உள்ளிட்ட தொகுப்புகளை வழங்குவதற்கு அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது.

போர் விமானங்களில் நவீனத்துவத்தை ஏற்படுத்துதல், விமானப் பயிற்சி, பராமரிப்பு, உதிரிப் பாகங்கள், மென்பொருள் உள்ளிட்டவை இந்த தொகுப்பில் அடங்கும் என்று அமெரிக்கா கூறியுள்ளது.

>>>>><<<<<

நாட்டின் வடமேற்கு பகுதியில் அடுத்த 5 நாட்களுக்கு இடிமின்னலுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும், புயல் காற்று வீசக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

அடுத்த 24 மணிநேரத்தில் வெப்பநிலை 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை குறையக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரபிரதேசம், பஞ்சாப், ஹரியானா மற்றும் சண்டிகரில் பலத்த காற்று வீசக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

ராஜஸ்தானின் சில பகுதிகளில் புழுதிப் புயல் வீசக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தில்லி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இன்று லேசான மழை பெய்தது.

லேசானது முதல் கனமழைக்கு வாய்ப்புள்ளதால் மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணிக்கு எதிராக டாஸ் வென்ற சென்னை அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

பெங்களூருவில் நடைபெறவுள்ள இப்போட்டி இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது

>>>>><<<<<

பெர்த்தில் நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஹாக்கி போட்டியில் இந்தியா 2-3 என்ற கோல்கணக்கில் தோல்வியடைந்தது.

>>>>><<<<<

Lopota ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருத்துஜா போஸ்லே – நியூஸிலாந்தின் Paige Hourigan இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஜார்ஜியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 7-6, 6-3 என்ற செட்கணக்கில் மெஸிடோனியாவின் Lina Gjorcheska – ஜார்ஜியாவின் Gorgodze Ekaterine இணையை வென்றது.

மற்றொரு போட்டியில் இந்தியாவின் ஸ்ரீவள்ளி ரஸ்மிகா – ரஷ்யாவின் Alexdra Shubladeze இணையும் இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

>>>>>END<<<<<